DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender /Miscellaneous : **CC.No. 207/2024**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : PW. 4
Name : ரவி (சிறப்பு சார்பு ஆய்வாளர்)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day May of 2026

(எதிரி ஆஜரில்லை, பிரிவு 317 Cr.P.C/355 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை:–

நான் தற்போது ஆவியூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் ஆவியூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் ஜெயலட்சுமி அவர்கள் பணி மாறுதலாகி சென்று விட்டதால் நான் வழக்குகோப்பை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.08.2021 ம் தேதி 6.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் ஜெயலட்சுமி நிலைய பொறுப்பில் இருந்த போது காரியாபட்டி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையிலிருந்து ஆவியூரை சேர்ந்த நீதிகண்ணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.97/21 பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் வாக்குமூலம் **அசா.ஆ.2** மற்றும் **அந்த**

**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் முதல் தகவல் அறிக்கை அசலுடன் புகார் வாக்குமூலத்தை இணைத்து குற்றவியல் நீதித்துறை நீதிமன்றம் எண்.2 விருதுநகருக்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

2. பின்னர் அன்றே சார்பு ஆய்வாளர் ஜெயலட்சுமி அவர்கள் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அழகுபாண்டி மற்றும் மகாலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் வாக்குமூலம் பெற்று சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் 10.00 மணிக்கு அருவாள் ஒன்றை அவர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் மேலே கண்ட இருவரிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். (**மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அருவாளின் புகைப்படம் (எண்ணம் –2) **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்னர் அன்றே 12.30 மணிக்கு ஆவியூர் அம்மா பூங்கா அருகேவைத்து எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 15.11.2021 ம் தேதியன்று இவ்வழக்கில் காயம்பட்ட நீதிகண்ணன் என்பவருக்கு சிகிச்சை அளித்த காரியாபட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் மைத்ரேயி என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். நீதிகண்ணன் என்பவரின் காயச்சான்று **அசா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் விசாரணையை

முடித்து 15.11.2021 ம் தேதியன்று எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் சொன்ன நாள், நேரத்தில் சார்பு ஆய்வாளர் புகார் வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சரியான புலன் விசாரணை மேற்கொள்ளாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :-**

**இல்லை**